* Text Book Committee (vide Fort St. George G...
Part 1-B Page 203 dated 19th May 1925.

# நற்பெண்டிர்

## "IDEAL WOMEN"

E. S. கோவிந்தன்
எழுதியது

கவர்ன்மெண்டார் அங்கீகரித்தது

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
புக்ஸெல்லர்ஸ் & பப்ளிஷர்ஸ்
மதராஸ் & மதுரை
1930

3-8 sheets

# நற்பெண்டிர்

## "IDEAL WOMEN"

24 JUL 1930

இ. ஸ்ரீ. கோவிந்தன்
இயற்றியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
புக்ஸெல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்
ராஸ் & மதுரை.

1930 [விலை அணா 4
றும் பதிப்பு

4/15
N30
59136

...பிள்ளைகளுக்கு உபயோகமான

## தகுந்த புத்தகங்கள்.

| | |
|---|---|
| ஒளவை சரிதை | 0—2— |
| நற்பெண்மணி | 0—4— |
| நற்புதல்வர்கள் | 0—4— |
| மகாராணி மங்கம்மாள் | 0—3— |
| கர்ணன் கதை | 0—4— |
| குமாரக்கடவுள் | 0—6— |

## தேசசர்வ்படி

என்ற

## இயற்கைப் பொருட் பாடம்.

R. சவரிமுத்து அவர்கள் எழுதியது.

இப்புத்தகத்தில் கடவுளின் இயற்கையால் ... பிராணிகளின் பாடங்களும் தாவர பாடங்களும் ... வாழ்வன பாடங்களும் தொகுத்து ... இருக்கிறது.

## எலிமெண்டரி பாடசாலைக்குரிய நீதிப்பாடங்கள்.

| | |
|---|---|
| உலகநீதி மூலமும் உரையும் | 0—0—[illegible] |
| ஆத்திச்சூடி மூலமும் உரையும் | 0—0—[illegible] |
| கொன்றைவேந்தன் மூலமும் உரையும் | 0—0—9 |
| வெற்றிவேற்கை மூலமும் உரையும் | 0—0—[illegible] |

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்.

செப்பனிட்டு முடித்த நாள்

சரிபார்க்கும் மு.பா.ள். கையொப்பம்.

ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்

Printed at the
VIVEKANANDA PRESS
MADURA 1930

## உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சீதை | 1 |
| 2. | கைகேயி | 6 |
| 3. | சாவித்திரி | 8 |
| 4. | மண்டோதரி | 20 |
| 5. | நளாயினி | 23 |
| 6. | தாரை | 29 |
| 7. | தமயந்தி | 32 |
| 8. | வாசுகி | 46 |
| 9. | கண்ணகி | 48 |



4

24 JUL 1930

# நற்பெண்டிர்.

## 1. சீதை

நமது பாரத தேசம் முன் காலத்தில் பல நாடுகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு சிறந்த அரசரால் ஆளப்பட்டு வந்தது. அவற்றுள் விதேகம் என்பதும் ஒன்று அதன் இராஜதானி, மிதிலை. அதை யாண்டுவந்தவர்களுள் ஜனகர் என்பவரும் ஒருவர். அவர் மகா நீதிமான். சிறந்த குணங்கள் உடையவர். அவருக்கு சீதையென்று ஒரு புதல்வியிருந்தாள். அப்பெண்மணி குழந்தைப் பருவத்திலேயே மிக்க அழகும் குணமு முடையவளாயிருந்தாள்.

ஜனகர், அவளை அயோத்தி வேந்தராகிய தசரதரது மூத்த குமாராராகிய இராமருக்குத் திருமணம் முடிப்பித்தார். சீதா ராமர் இருவரும் மிக்க ஒற்றுமையுடனும் அன்புடனும் இல்லறம் நடத்தி வந்தனர்.

ஓர் சமயம் ஸ்ரீராமரை பதினான்கு வருஷங்கள் காட்டில் கழித்து வரும்படி அவரது தந்தை ஆக்ஞையளித்தார். அப்பொழுது இராமர் சீதையிடம் வந்து தான் காட்டிற்குச் செல்ல நிச்சயித்திருப்பதாய்க் கூறினர். உடனே சீதை அவரைப் பணிந்து தன்னையும் உடன் அழைத்துப்போகும்படி வேண்டினள். இராமர் அதற்கு இசையவில்லை; சீதை மனம் வருந்தினள். மூர்ச்சையுற்றாள். பின் இராமர் அவளை மூர்ச்சை தெளிவித்து, கானகத்திலுள்ள பல துன்பங்களையும் ஒவ்வொன்றாய் எடுத்துக்கூறினர். சீதை, அவை அனைத்தையும் அமைதியாய்க் கேட்டுக்கொண்டாளாயினும், தன் கணவனுடனேயே காடு செல்ல விரும்பினள். தன் நாயகனுடன் வசிக்கும் இடம் காடே ஆயினும் தனக்கு, பல பொருள்களும் நிறைந்த மாளிகை யாகும் என்றாள். தன் நாயகனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு, தனித்து தான் நாட்டில் வாழ்வது அழகல்ல என்றாள். ஓர் மனைவி தன் நாயகனை இன்பத்திலும் துன்பத்திலும் பிரியாமல் வாழவேண்டும் என்றும் ஆதலால், தான் இராமருடன் காடு செல்வது உறுதியென்றும் கூறினள்.

இவைகளைக் கேட்கவும் இராமர் மனம் இளகிற்று. சீதையையும் அழைத்துச் செல்ல நிச்ச-



யித்தார். அவரது தம்பியாகிய இலக்குமணனும் உடன் செல்லத் தயாரானன். அனைவரும் காடு சென்றனர்.

வழியில் எத்தனையோ துன்பங்கள் சீதைக்கு நேர்ந்தன. ஆயினும் அவள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. தனது மெல்லிய பாதங்கள் கல்லிலும் முள்ளிலும் பட்டு வருந்தியகாலத்திலும் அவள் வருந்தாமல் தன் நாயகன் மனம் கோணமல் நடந்து வந்தாள். காலையில் அவர் கொண்டு வரும் பழங்களையும் இதர உணவுப் பொருள்களையும் பக்குவமாய்ச் சமைத்து, தன் நாயகனும் மைத்துனனும் உண்டபின்னர் தானும் அவற்றை உண்டு மகிழ்ந்தாள். வனத்தின் துன்பங்களை தன் நாயகன் அறியவிடாமல் அவருக்கு இன்பத்தை ஊட்டி வந்தாள். தன் நாயகனுக்கு, இன்பம் விளைந்தபோது தானும் இன்பம் அடைந்தாள். அவர் துன்பம் அடைந்த போது தானும் எல்லையற்ற துயர்க்கடலில் ஆழ்ந்தாள்.

ஓர் நாள் இராமலக்குமணரை வெளியிற்செல்லச்செய்து இராவணன் என்னும் அரக்கன் சீதையைத் தூக்கிச் சென்றான். அப்போது சீதை வாய்விட்டு அலறினள். அவளது சப்தத்தைக்

கேட்டு உதவி செய்ய வந்த ஜடாயு என்பவரை இராவணன் வெட்டித் தள்ளினான். பின் அவன் சீதையை இலங்கைக்கு எடுத்துச் சென்றான். அங்கு அவன் தன்னை மணம்செய்து கொள்ளும்படி சீதையை எவ்வளவோ இம்சித்தான். ஆனால் தனது நாயகனது நாமத்தையே கூறிக்கொண்டு இருந்தாளேயன்றி அவனைப் பார்க்கவும் இல்லை. மென்மேலும் இராவணன் சீதையை வருத்தினான். பின் இராவணன் சீதையை ஒரு கடும் சிறையில் வைத்தான். ஓர் சமயம் சீதை இலங்கைக்கு அதிபதியும் மூவுலகையும் அடக்கி ஆளுபவனும் ஆகிய அவ்விராவணன் முன் ஒரு துரும்பைக் கிள்ளியெறிந்து அவனை அத்துரும்பாக மதித்து, தர்மங்களை எடுத்துக் கூறினாள். அழிவு காலம் கிட்டியதால் இராவணன் காதில் அவை புகவில்லை. மீண்டும் அவள்மீது காதல் கொண்டவனாய் அகன்றான்.

அரக்கனது, இம்சையையும், அரக்கியர் செய்யும் அக்கிரமமும் சீதையாற் பொறுக்க முடியவில்லை ஆதலினால் சீதை உயிர்விடத் துணிந்தாள். அச்சமயம் ஸ்ரீராமரால் அனுப்பப்பட்ட தூதரான அநுமான் அவளுக்குத் தேறுதல்கூறி அவளது உயிரைக் காத்தார். எவ்வளவு தான்



துன்பம் ஏற்பட்ட காலத்திலும் சீதை தன் நாயகன் தன்னை வந்து மீட்பார் என்ற நம்பிக்கையுடன் இருந்தாள்.

பின் விளைந்த யுத்தத்தில் இராமர் இராவணனையும் மற்றைக் கொடிய அரக்கரையும் கொன்றார் சீதையை மீட்டார்.

சீதை இராமர் முன் வந்ததும் இராமர் அவளை வெறுத்துப்பேசினார். அரக்கரிடம் சிறையிருந்த பெண்ணைத் தன்னால் ஆதரிக்க முடியாது என்றார். உடனே சீதை தன் தூய்மையைக் காட்டத் தீக்குளித்தாள். அவ்வாறு தீக்குழியில் அவள் பாயும்பொழுதும் தன் நாயகனையே தொழுதாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அக்கினிதேவன், அவளைத் தன் கரத்தில் ஏந்திக் கொணர்ந்து இராமரிடம் விடுத்தார். இராமரும் மகிழ்ச்சியுடன் அவளை அங்கீகரித்தார். அவளது பதிவிரதா தர்மத்தை எல்லா உலகங்களும் புகழ்ந்தன. தேவமாதர்கள் அனைவரும் அவளை ஒரு தெய்வமாகக் கொண்டாடினர்.

பின்னரும் பலவகைகளில் சீதையை இராமர் சோதித்தார். சீதை தன் நாயகபக்தியிற் சிறிதும் குறைவுபட்டிலள். இத்தகைய உத்தம மனைவியைப்பெற்ற இராமரை அவரது பாக்கியத்திற்காக எல்லா உலகும் புகழ்ந்தன.

## 2. கைகேயி

அயோத்தி வேந்தராகிய தசரதரது இரண்டாவது மனைவியாகிய கைகேயியைப்பற்றி ஒரு கதை உண்டு:—

பூர்வம், சம்பராசுரன் என்று ஒருவன் இருந்தான். அவன் மிக மூர்க்கன். உலகிலுள்ள அநேக முனிவர்களை மாய்த்தான். மிகுந்த வல்லமையுள்ளவன். உலகத்தில் தன்னுடன் போர் செய்யத்தக்கவர் ஒருவருமில்லை என்றறிந்து தேவருலகிற்குச்சென்று அந்த இந்திரனுடன் போர் புரிந்தான். இந்திரனும் தனது வல்லமை முழுவதையும் காட்டிப் போர் புரிந்தான். கடைசியில் அம்மாய அசுரனே வென்றான். இந்திரன் தோல்வி யடைந்தான். பின் அசுரன் இந்திரனை நாட்டைவிட்டும் துரத்தினான்.

அப்பொழுது இந்திரன் தனக்கு வேறோர் புகலிடமும் காணாமல், அயோத்தி வேந்தராகிய தசரதரை அடைந்தான். அப்பொழுது அவன் மேல் இரக்கம்கொண்ட தசரதர் தான் சம்பரனுடன் யுத்தம் செய்து வெல்வதாய் மொழிந்தார். பின் அவர் யுத்தத்திற்குப் புறப்படத் தயாரானார். அப்பொழுது அவரது இரண்டாவது மனைவி



யாகிய கைகேயி, யுத்தத்தில் தன் நாயகனுக்குத் தீங்கு நேரிடலாம் என்று கருதித் தடுத்தாள். தசரதர் அவளது மொழிகளை மறுத்துயுத்தத்திற்குப் புறப்படத் தயாராகவே, கைகேயி தன்னையும் உடன் அழைத்துச்செல்லுமாறு அவரைவேண்டினாள். தசரதர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கைகேயி தன் நாதனுடனேயே செல்ல விரும்பியபடியால் அவளை உடன் அழைத்துக்கொண்டு தசரதர் யுத்தத்திற்குப் புறப்பட்டார். அங்கு சம்பராசுரனுடன் கடும்போர் புரிந்தார். தசரதருடன் போர் செய்ய சம்பராசுரனால் முடியவில்லை. எப்படியாயினும் அவரைக் கொல்லக் கருதினான். உடனே அவன் தன் ஆயுதத்தால் தசரதரது இரதத்தின் அச்சை முறித்தெறிந்தான். இரதம் இனிச்சாய்வது நிச்சயம் என்றறிந்த தசரதர் சற்றுத் திகைத்தார். அத்தருணம் அவரது மனைவியும் பதிபக்தியிற் சிறந்தவளும் ஆகிய கைகேயி சரேலெனக் கீழிறங்கி தனது கரத்தை அச்சாகக் கொடுத்தாள். கண்ட தேவரும் கைகேயியின் கற்பை வியந்தனர். பின் தசரதர் தன்னிரதத்தில் இருந்துகொண்டே சம்பராசுரனுடன் போர் புரிந்து அவனை வென்று இந்திரனுக்குப் பழைய பதவியை அளித்தார். இந்திரனும் மகிழ்ந்தான்.

அப்பொழுது கைகேயியின் நடத்தையாற் பெரிதும் மகிழ்ந்த தசரதர், கைகேயி விரும்பும் இரண்டு வரங்களைத் தருவதாய் வாக்களித்தார். கைகேயி தன் கடமையைத் தான் செய்ததாய்க் கருதினாளே யன்றி வரம்பெற விரும்பவில்லை. ஆனால் நாயகன் சொல்லை மறுத்தல் தகுதியன்று எனக்கருதி, தான் விரும்பியபோது அவ்விருவரங்களையும் பெற்றுக்கொள்ளுவதாகக் கூறினாள். பின் அவர்கள் அயோத்திக்குத் திரும்பினர்.

---

## 3. சாவித்திரி

முன் மத்ரதேசத்தை ஆண்ட அசுவபதிக்கு சாவித்திரி என்ற ஒரு மகள் இருந்தாள். அவள் நல்ல குணசாலி. குழந்தையாயிருக்கும்பொழுதே காடுகளில் தவம் செய்யும் முனிவர்களிடம் சென்று சம்பாஷித்து மிகுந்த கல்வித்தேர்ச்சியுடையவள் ஆனாள். தக்க வயது வந்த பின்னரும் அவள் அம்முனிவர்களிடம் சென்று பல விஷயங்களைப் பற்றிப் பேசி வந்தாள். களங்கமற்ற நெஞ்சுடையவளான சாவித்திரியை அம்முனிவர்கள் தமது குமாரி போலவே பாவித்துப் பல நல்ல கதைகளையும் நூல்களையும் அவளுக்குக் கற்பித்து வந்தனர்.



ஓர் சமயம் சாவித்திரி முனிவராசிரமத்திலிருந்து திரும்பிவரும் வழியில் அதி சுந்தரம் வாய்ந்த ஒரு இராஜகுமாரனைக் கண்ணுற்றாள். அவன் மீது சாவித்திரி காதல்கொண்டாள்; தனக்கேற்ற மணாளன் அவனே என்று கருதினாள். பின் வீடு சேர்ந்தாள்.

நாளடைவில் சாவித்திரியின் மேனியில் வாட்டங்கண்ட தாய் தந்தையர் அவளது விவாகத்தைக் குறித்து ஆலோசிக்கலாயினர். நற்குணங்களும் நல்லழகும் வாய்ந்த ஒரு அரசிளங்குமாரனைத் தமது பெண்ணிற்கு மணாளன் ஆக்க விரும்பினர்.

ஓர் நாள் அரசனது குலகுருவாகிய நாரத முனிவர் அவனிடம் வந்தார். அரசன் அவரை வணங்கி உபசரித்து "சுவாமி! என் மகளுக்கு ஏற்ற மணாளனை அறிந்துரைக்க வேண்டும்" என வேண்டிக்கொண்டான். முனிவரும் அதைக் குறித்து சாவித்திரியை வினவுதலே தகுதியெனக் கருதினார். ஆதலின் அவர் சாவித்திரியை நோக்கி "பெண்ணே நீ உன்னழகிற்கேற்ற மணாளனை வரித்திருக்கிறாயா கூறு" என்றார்.

சாவித்திரியும் தான் வனத்தில் கண்ணுற்ற சத்தியவான் மீது காதல் கொண்டதாய்க் கூறினாள்.

உடனே முனிவர் அரசனை நோக்கி "அசுவபதி! சத்தியவான் உன் மகளுக்கு ஏற்ற நாயகன்தான் என்றாலும் அவனுக்குச் சாவித்திரியை மனைவியாக்க எனக்கு விருப்பமில்லை" என்றார்.

இதைக்கேட்டதும் அரசனுக்குப் பெரும் வியப்புண்டாயிற்று. உடனே அவன் முனிவரை வணங்கி "ஸ்வாமி! தாங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லை. சத்தியவான் உயர்ந்த குணசாலி, அழகுடையவனென்று தாங்களே கூறுகின்றீர்கள். ஆனால் அவனுக்கு சாவித்திரியைக் கொடுக்க விருப்பமில்லையென்றும் கூறுகிறீர்கள்"

முனிவர்:—அரசே! நான் அதைக்கருதிக் கூறவில்லை. சத்தியவான் உயர் குடிப்பிறந்தவன்; நற்குணக்குன்று; அழகில் மன்மதனை வென்றவன். ஆயினும் அவனை மணந்தால் நமது சாவித்திரி துர்ப்பாக்கியவதி ஆவாளே என்று அஞ்சுகிறேன்.

அர:—சுவாமி! தமது கருத்தை விளங்கவுரைக்க வேண்டுகிறேன்.

முனி:—அசுவபதி! அவ்வழகிய குமாரனுக்கு வாழ்நாள் இன்று முதல் ஒருவருட காலமேயாகும்; பின்னர் நமது குமாரியின் கதி பரிதாபமானது அல்லவா?



அர:—ஐயோ அப்படியா? அக்கொடுந் துன்பத்தையா என்மகளடைய வேண்டிவரும்?

"மக்களிழந்த இடும்பையினும்
மனையாளிழந்த விடும்பையினும்
மிக்க விடும்பை யோவாத
விதவையிடும்பை"

அல்லவா? அப்படியாயின் அவனைப்பற்றி நாம் நினைக்க வேண்டியதில்லையென்றார். பின் முனிவர் சாவித்திரியை நோக்கி "குழந்தாய்! வேறொருவனை உனது நாயகனாகத் தேர்ந்து கொள்ளலாகாதா" என்றார். உடனே சாவித்திரி நாரதனைப்பணிந்து "சுவாமி! மன்னிக்கவேண்டும். ஓர் கன்னிகை முதல் முதல் யாரைக் கணவனாகவரிக்கின்றாளோ அவனையே மணக்கவேண்டும் என்பது வேத வாக்கென்று தங்களைப் போன்ற முனிவர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன். அவரைக் கண்டவுடன் என்னையறியாமலே என் மனத்தில் காதல் எழுந்தது. ஆதலால் அவரையேதான் மணப்பேன்" என்றாள்.

அசுவபதி உடனே தன்மகளை நோக்கி "சாவித்திரி! நீ குழந்தையாதலின் அறியாய். விதவைத் துன்பத்தைக் காட்டிலும் கொடிய துன்பம் யாதுமில்லை. குழந்தையையிழந்தோருக்கேனும், மனைவியை இழந்தோருக்கேனும், தந்தையை

யிழந்தோருக்கேனும், தாயை இழந்தோருக்கேனும், அவ்வம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம். ஆனால் கணவனை 'யிழந்தோர்க்கு அம்மம்மா! ஒன்றுமேயில்லை. ஆதலின் அவ்வெண்ணத்தை விட்டுவிடு. நீ அத்துன்பத்தையடைந்தால் உன்னைக்கண்டு நாங்கள் எவ்வாறு சகிப்போம்'' என்று கூறி வருந்தினார். முனிவரும் அவனை நீக்கி வேறொருவனை மணம் புரியும்படி கூறினார்

யார் என்ன கூறியும் சாவித்திரியின் மனம் மாறவில்லை. சத்தியவானுக்கே தன்னை மணம் செய்து கொடுக்கவேண்டும் என்றாள். இல்லாவிடில் தான் கன்னிகையாயிருப்பதாகவே கூறினாள்.

பின் முனிவர் விதியை வெல்ல எவராலும் முடியாதென்றும், அவளது விருப்பப்படியே செய்யும்படியும் கூறி அகன்றார்.

பெற்றோரும் அவளது விருப்பத்தையே நிறைவேற்றக் கருதினர்.

சத்தியவான், தன்னிராஜ்யத்தை இழந்து, கண்ணிழந்து காடு வந்த ஓர் அரசரது செல்வக் குமாரன். அவன் வயது முதிர்ந்த தனது தாய்



தந்தையரே தனது தெய்வமெனக் கருதி அவர்களுக்கு உற்றவற்றைச் செய்து வந்த உத்தம குமாரன்.

ஓர் நாள் அசுவபதி சத்தியவானது தந்தையின் ஆசிரமத்திற்கு வந்தான். தன்னைப்பலவாறு உபசரித்து வரவேற்ற அவர்களிடம் அசுவபதி தன் மகளது கருத்தை அறிவித்தான். சத்தியவானது தந்தையும் தன் மகனுக்கு சாவித்திரியை மனைவியாக்க இசைந்தார். சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் திருமணம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. பல சீதனப் பொருள்களுடன் தன் மகளை அசுவபதி அவளது புக்ககத்திற்கு அனுப்பினான். அங்கு சாவித்திரியும் சத்தியவானும் மிக இனிதாய் இல்லறம் நடத்தி வந்தனர். ஆயினும் சாவித்திரி தன் புருஷனது வாழ்நாளைப்பற்றி முனிவர் கூறியதை மறக்கவில்லை.

ஒரு வருஷ காலம் இவ்வாறு கழிந்தது. வருஷமுடிவு தினத்தில் சத்தியவான் வழக்கம்போல் விறகும் உணவுப்பொருள்களும் சேகரித்துவரக் காட்டிற்குப் புறப்பட்டான். சாவித்திரியும் உடன் வருவதாய்க் கூறினாள். அன்று காலையிலேயே அவள் ஸ்நானம் செய்து மிக்க தூய்மையுடன் ஈசனைத் தொழுது கொண்டிருந்தாள்.

அப்பொழுது சத்தியவான் காட்டிற் பல முட்க ளால் அவளுக்குத் துன்பம் விளையுமென்று அங் கேயே யிருக்கும்படி கூறினான். சாவித்திரி மென் மேலும் தன்னை யழைத்துச் செல்லுமாறு வேண் டவே, சத்தியவானும் இசைந்தான். சாவித்திரி யும் அவனைத் தொடர்ந்தாள்.

சத்தியவான் போகும்பொழுது பல வனக் காக்ஷிகளைத் தன் மனைவிக்குக் காண்பித்துக் கொண்டே சென்றான். சாவித்திரியும் அவற் றைக் காண்பது போலவும் மகிழ்வது போலவு மே இருந்தனள். ஆயினும் உண்மையில் அவள் தன் நாயகன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டு சென்றாள்.

நடுக்காட்டில் விறகு தறிக்க, சத்தியவான் ஓர் மரத்தின் மீது ஏறினான். அச்சமயம் அவ னுக்கு ஏதோ ஒருவிதமான தலைவலி கண்டது. கீழிறங்கினான்; மிகவும் சோர்ந்தான்; அவனது தேகத்தில் நடுக்கம் கண்டது. நாருழறிற்று. கண்கள் பஞ்சடைந்தன. இந்நிலையில் தன் கண வனைக் காணவும், சாவித்திரி கொண்ட துன்பத் திற் கெல்லையில்லை. தன் நாயகனைத் தழுவித் தன் மார்போடு சாத்திக்கொண்டு அவனுக்குப் பலவித உபகாரங்களைச் செய்து கொண்டிருந்தாள்.



அச்சமயம் ஒரு கோர வடிவம் அவளுக்குத் தென்பட்டது. அது கருத்து ஆகாயத்திற்கும் பூமிக்குமாய் வளர்ந்திருந்தது. அதன் கையில் ஓர் பாசக்கயிறிருந்தது. அதன் கண்கள் சிவே லென சிவந்திருந்தன. இவ்வுருவைக் கண்ட தும் தன் நாயகனது உயிரைக் கவரவந்த யமன் அஃதே என்று சாவித்திரி தெரிந்து கொண் டாள். உடனே அவள் இயமனை நோக்கி,

"யாரேயோ நீவிர் இவண் வந்த காரியத்தை
நேராக எற்கு நிகழ்த்திடுக—பாரீங்(கு)
என்கணவ னுடிக் கிருந்தேற்கும் என்முன்னர்
அன்பினராய் வந்தீர் அமைந்து"

என்றாள்.

உடனே இயமன் அவளை நோக்கி,

பாவாய் கேள் தென்புலப் பார்காக்கும் வேந்தன்யான்
தீவாய் யமனென்று செப்புவார்—ஆவியையே
உன்கணவன் வாழ்நாள் அழிந்ததனாற் கொண்டகல
வந்தனன்யா னென்றான் மகிழ்ந்து.

உடனே சாவித்திரி அவனைப் பணிந்து,

தென்புலத்தார் கோனே தெய்வ அரசிறையே
என்கணவ னின்னுயிர்கொண் டேகும்போ-தென்னுயிரை
யுங்கொண்டு செல்க உயிர்வாழேன் பின்னரியான்
தென்றெளிரும் தாசாய் திகழ்ந்து.

இயமதர்மராஜனே உமது கடமை உயிர்களை யழித்தல். என் நாதன் வாழ்நாள் முடிந்தமையின் அவருயிரைக் கொண்டு செல்லல் அமைவுடையதேயாகும். அத்துடன் நாதனையிழந்து வாழ இசையாத என்னுயிரையும் சேர்த்துக் கொண்டு போகும்படி வேண்டிக் கொள்கிறேன் என்றாள்.

பின் இயமன் சாவித்திரியை நோக்கி "பெண்ணே! நீ கூறுவது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. வாழ்நாள் முடிந்தவரது உயிரைக் கவரத்தான் எனக்குக் கடமை உண்டேயன்றி என்னுடன் வரத்தயாரா யிருப்பவர்களை யெல்லாம் கொண்டு செல்ல என்னாலியலாது. மேலும் அவ்வாறு நான் செய்வேனாயின் எமதர்மன் என்ற எனது பெயர்மாறி தீராப்பழியல்லவா என்னைச் சாரும்? ஆகையால் என் கடமையை நிறைவேற்றுவதற்காக சத்தியவானது உயிரை இதோ கொண்டு செல்கிறேன். நீ திரும்பிச்சென்று சுகமே வாழ்ந்துவா" என்று கூறி சத்தியவான் மீது தனது பாசத்தை வீசி அவனது உயிரைக் கவர்ந்தான்.

உடனே சாவித்திரி இயமன் பாதங்களிற் பணிந்து எழுந்து கண்ணீர் வடித்து "தர்மராஜ



னே! தமது உயர்ந்த உருவை யான் தரிசிக்கும் பாக்கியத்தை எனக்கு அளித்தீர். என் மீது கிருபை கொள்ளவேண்டும்" என்றாள்.

அதற்கு இயமன் அவளை நோக்கி "பெண்ணமுதே! பாவிகளது உயிரை என் தூதரே கொண்டு செல்வார். உன் நாதன் மகா உத்தமன் ஆதலின் அவனது உயிரைக் கவர யான் வந்தேன். நான் பிறர் ஒருவர் கண்களிலும் படேன். உனது கற்பின் மகிமையால் தான் நீ என்னைக் கண்டு கொண்டாய். கற்பருங்கலமே, இனி நீ உனது ஊர் நோக்கித் திரும்பிச்செல் வருந்தாதே" என்றான்.

உடனே சாவித்திரி தாரை தாரையாய்ப் பெருகும் கண்ணீருடன் இயமனை நோக்கி "இறையே! கணவனையிழந்த எனக்கு இனி வாழ்வேது? ஊரேது எப்படியாயினும் நாதனுடன் இருக்கவே நான் விரும்புகிறேன்" என்றாள்.

இயமன் "குழந்தாய் உண்மையாய் உன் மீது நான் இரக்கம் கொள்ளுகிறேன். ஆயினும் அதற்காக என் கடமையை விலக்க என்னால் முடியாது. உனக்கு உன் நாதன் உயிரைத் தவிர

வேறேதேனும் வரம் வேண்டுமாயிற் கேள் தருகிறேன்" என்றான். பின் சாவித்திரி இயமனைப் பணிந்து,

"தேசமான் தந்தை திகழு மகவின்றி
ஆசி மிகநொந் தழுகின்றார் — மாமகவு
ஓர்நூ றவற்கு உளவாக உத்தமரே
ஓர்வர மீவீர் உவந்து"

அதற்கு இயமன்,

"தந்தேன் தந்தையென்றான் சார்தருமன் நன்னுதலும்
அந்த வரத்தோ டமைந்திலளால் — செந்திருநேர்
மாதவளும் தென்புலத்தார் மன்செல் வழிச்சென்றாள்
கோதிலா நாதற் குறித்து"

பின்னும் இயமன் அவளை நோக்கி, "பெண்ணே! இன்னும் ஏன் என்னைத் தொடர்கின்றாய்? திரும்பிச் செல். நாதன் உயிர் தவிர வேறென்ன வரம் வேண்டுமென்றாலும் கேள். அளிக்கின்றேன்" என்றான்.

அப்பொழுது சாவித்திரி,

"நாதன் தனைப்பெற்றார் நாடிழந்து கண்ணிழந்து
வேதனை கொண்டு விழுகின்றார் — பாதமையும்
கண்ணும் அளித்துக் காப்பீர் கடவுளரே
விண்ணவரே என்றாள் விழுந்து"



பின்னும் அவள் மீது இரக்கங்கொண்ட இயமன் அவளது கற்பை வியந்து, "பெண்ணே! இவ் வரமும் அளித்தேன். இனியேனும் திரும்பிச் செல். உன் மெல்லிய பாதங்கள் வருந்த நீ என்னுடன் வருவதில் உனக்கென்ன பலன்?" என்றான்.

உடனே சாவித்திரி,

"நாதன் மரித்தார் நான் தனித்தேன் நல்லுயிர்க்கு
மாதுயரை நீக்க வழிகாணேன் — ஆதலனைக்
காக்கும் கடவுள்! கருணையினை எற்குமக
வாக்கும் வரமருள் வாய்"

என்றாள். அதற்கு இயமன் சிறிதும் யோசியாமல்

"உந்தனக் கேமகவு நூறாய் அளித்திட்டேன்
செந்திருநேர் சுந்தரந்தேர் செல்வியே — வந்தவழி
மீண்டேகு கென்றான் விமலன் அதைக்கேட்டு
மாண்டவளும் சொல்வாள் மகிழ்ந்து."

உடனே சாவித்திரி,

"மெய்யவனே எற்குமக வீந்திட்டீர் என்கணவன்
செய்யுயிரைக் கொண்டு செலுகின்றீர் — பொய்யிலீர்!
எவ்வாறு யானும் மகப்பெறுவன் என்றுரைத்தாள்
செவ்விடையாள் தானும் நயந்து."

தன் மொழியிலேயே சிக்கிக்கொண்ட இயமன் இதைக்கேட்டுத் திகைத்தான். வழியொன்

றும் காணாமல் தன் மொழியைத் தாங்கலே கடன் என்று கருதி சத்தியவான் உயிர் பெற அருள் புரிந்து சாவித்திரியை வாழ்த்தி அகன்றான்.

பின் சர்வித்திரி சத்தியவான் உடல் கிடந்த இடத்திற்கு வந்தாள். அங்கு அவனும் தூங்கி யெழுந்தவன்போல் விழித்தான். பின் இருவரும் இல்லமணுகினர். அங்கு கண்ணடைந்து மகிழ்ந்த சத்தியவானது பெற்றோர் தமது அருமை மருகியையும் மகனையும் தழுவி மகிழ்ந்தனர். சாவித்திரி நடந்தவை யாவற்றையும் நவின்றாள். சின்னாட்களில் இயமன் மொழிப்படியே அவர்களுக்கு அரசும் கிடைத்தது. அசுவபதிக்கு திறலுடைய நூறு குழந்தைகள் உதித்த பின் அனைவரும் மகிழ்ந்தனர்.

---

## 4. மண்டோதரி

பூர்வம் மயம் என்பவனுக்கு மண்டோதரி என்று ஒரு குமாரி இருந்தாள். அவள் கட்டழகி. உயர்ந்த குணமும் கல்வியும் உடையவள். அத்தகைய தன் மகளை குலத்தாலும் குணத்தாலும் செல்வத்தாலும் சிறந்த ஒருவனுக்கு கொடுக்க வேண்டும் என்பது மயனுடைய விருப்பமாயிருந்தது.



ஒரு நாள், இலங்கையை யாண்டுவந்த இராவணன் என்பவன் மண்டோதரியை மணக்க விரும்பி மயனை யடைந்தான். அவன் மயனிடம் தான் பிரம்ம குலத்தில் உதித்தவன் என்றும் மூன்றுலகையும் ஆள்பவனென்றும் கூறினான். இராவணன் உயர்ந்த அழகு உடையவன். வேதம் முதலிய சகல கலைகளையும் பிழையின்றி ஓதியவன். ஆதலால் அவனே தன் மகளுக்கு ஏற்ற மணாளன் என்று கருதிய மயன், தன் குமாரியை அவனுக்கே மணம் முடித்து, பல சீர்வரிசைகளோடு இராவணனுடன் அனுப்பினான். இராவணன் சிறிது காலம் மண்டோதரியுடன் அன்பாய் வாழ்ந்தான்.

இராவணன் இராக்கதன். அளவு கடந்த காமமுடையவன். நிலையற்ற புத்தியுள்ளவன். பல பெண்களை மனைவியரா யடையவேண்டும் என்ற விருப்பம் உடையவன். ஆதலால் தன் மனதிற்கியைந்த அழகுடைய பல தேவமாதர்களையும் பிறதேவர் மாதர்களையும் பலாத்காரமாய் இழுத்து வந்து தன் மனைவியராக்கிக்கொண்டான். நாளடைவில் அவனுக்கு மண்டோதரியிடத்தில் அன்பு குறைந்தது. ஆனால் மண்டோகரி தன் நாதனை வெறுக்கவில்லை. அரக்கர் குலப்பெண்கள் பலர் பதிவிரதா தர்மம் இல்லாதவர். உணர்வு

சென்றுழிச் செல்லும் ஒழுக்கினர்கள்; ஆனால் மண்டோதரியோ தன் பதியையே பதியெனக் கருதித் தொழுதாள். தான் எப்படி நடந்து கொண்டால் தன் நாதனுக்கு மகிழ்ச்சியுண்டாகுமோ அவ்விதம் நடந்துவந்தாள். தன் நாதனுக்கு நேர்ந்த ஒரு சிறு கவலையையும் அவள் தனது பெருங்கவலையாகக் கொண்டாள். சுருக்கிச் சொல்லும் இடத்து, உத்தமமனைவியரில் தலைமை பெற்று விளங்கினாள்.

ஓர் சமயம் தீய இராவணன் ஸ்ரீராமரது மனைவியாகிய சீதையைக் கவர்ந்துவந்து கடும் சிறையில் வைத்தான். அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ளவேண்டும் என்பது அவனது விருப்பம். ஆனால் முடியவில்லை. பின் அவளைப் பலவாறு வருத்தினான்.

அச்செய்தியை மண்டோதரி அறிந்தாள். உடனே அவள் மிக வருந்தினாள். நாயகன் தன்னை வெறுத்துத் தள்ளினும் தான் அவனுக்கு நன்மை பயப்பனவற்றைக் கூறப் பின் வாங்கலாகாது என்று கருதி அவனிடம் சென்று சீதாராமரது உயர்வை எடுத்துக் கூறினாள். அவ்வாறு கூறிய மண்டோதரியை இராவணன் வெறுத்து இகழ்ந்தான். அவனது மொழிகளை மண்டோதரி



இன் மொழிகளாகவே ஏற்றுக்கொண்டு, சீதை மீது அவன் கொண்ட தீயகாதலை விட்டுவிடும்படி பெரிதும் வேண்டினாள்; பயன் படவில்லை. பின், விதிவலிது என்று அவள் கருதி மீண்டாள்.

பின் நடைபெற்ற கொடும்போரில் இவளது மகனாகிய இந்திரஜித்து மடிந்தான். கடைசியில் இராவணனை இராமர் கொன்றார். தன் நாயகன் இறந்ததை அறிந்த மண்டோதரி போர்க்களத்திற்கு வந்து, அவனது உடலைக்கண்டு அலறித்தானும் உயிர் துறந்தாள்.

அரக்கர் குல மங்கையாகிய இம்மண்டோதரி கற்புடை மகளிரால் கொண்டாடப்படும் ஒரு தெய்வமானாள்.

---

## 5. நளாயினி

முன், நளன் என்னும் ஒரு வேந்தனுக்கு நளாயினி என்ற ஒரு பெண் இருந்தாள். அவள் மிக்க அழகும் அதற்கிசைந்த நற்குணங்களும் வாய்ந்தவள்.

நளாயினியின் உத்தம குணங்களைப்பற்றிக் கேள்வியுற்ற மௌத்கல்யர் என்ற ஒரு முனிவர் அவளை மணக்க விரும்பினார்.

உடனே அவர் ஒரு பழுத்த கிழவுருத்தாங்கி நரைத்த தலையுடனும் குழிந்த கண்களுடனும் தடியூன்றிய கையுடனும் நளனிடம் வந்தார். நளனும் அவரை நல்வரவேற்று உபசரித்து வந்த காரணத்தை வினவினார். முனிவரும் தாம் அவனது கன்னிகையைத் தமக்குக் கேட்க வந்ததாகக் கூறினர். உடனே அரசன் நகைத்து தன் பெண்ணிடம் செல்லும்படியும் அவள் இசைந்தால் தான் கன்னிகாதானம் செய்து கொடுப்பதாயும் கூறினான்.

பின் முனிவர் நளாயினி இருக்கும் மாளிகை வரை அவ்வுருவத்துடனேயே சென்றார். அங்கடைந்ததும் முனிவர் தமது இயற்கையான அழகிய ரூபத்துடன் அவளிடம் சென்று தமது கருத்தையும் நளன் கூறியதையும் புகன்றார். நளாயினியும் அவரை மணக்க இசைந்தாள். உடனே அவர் தன்னை மணக்க இசைந்ததற்கு அறிகுறியாக அவளிடம் ஒரு ஆபரணத்தைப் பெற்றுக்கொண்டு, கிழவுருவுடன் நளனிடம் சென்று ஆபரணத்தைக் காட்டி உள்ளதை உரைத்தார். பின் அரசன் மகளை அழைத்து உண்மையை வினவினான். நளாயினி தான் முனிவரது வேற்றுருவைக் கண்டு சற்றுத் திகைத்தாள்



ஆயினும் அவர் ஒரு பெரிய மகானாயிருக்கலாமென்று கருதி அவரையே மணக்கத் தான் இசைந்ததாகக் கூறினாள். அரசனும் அவளது விருப்பப்படியே அவ்விருவருக்கும் திருமணம் முடிப்பித்தான். பின் முனிவர் அரசனிடம் விடை பெற்று நளாயினியையும் அழைத்துக்கொண்டு தமது ஆசிரமம் சேர்ந்தார்.

அரசிளங்குமாரியாய நளாயினி ஓர் முனிபத்தினியின் கடமைகளை அறியாள். ஆயினும் அவள் தன் நாதனைப் பணிந்து கேட்டு யாவற்றையும் அறிந்து அவர் கருத்துக்கேற்க நடந்து வந்தாள். தன் நாதன் மகிழும்போது அவளும் மகிழ்ந்தாள்.

பட்டால் தைக்கப்பெற்ற மெத்தைகளின் மீது புஷ்பங்கள் தூவிய அணைகளுடன் சயனித்துக் கொண்டிருந்த நளாயினி திடீரென்று வெறும் தருப்பையின் மீது சயனிக்க நேர்ந்தது. பலவகைப் பணியாரங்களுடன், உணவுண்ட நளாயினி காய்கனி இலைகளை உண்ண நேர்ந்தது. பலவித ஆபரணங்களும் அவள் அணியாமல் முனிபத்தினிக்கேற்றபடியே ஒழுகி வந்தாள். நளாயினியின் நடத்தையால் முனிவர் பெரிதும் மகிழ்ந்தாராயினும் மீண்டும் அவளது கற்பைப் பரிசோதிக்க விரும்பினார்.

ஓர் நாள், தமக்குக் குஷ்டரோகம் வந்தது போல் முனிவர் காட்டினார். அவர் கை கால்கள் எல்லாம் அழுகிச் சொட்டின. ஆசிரமம் முழுவதும் துர் நாற்றம் வீசிற்று. அவரது உடல் முழுதும் புண்மயமாயிருந்தது. அப்புண்களினின்றும் சீழ் என்ற ஒருவகைத் திராவகம் ஒழுகிக்கொண்டிருந்தது. இந்நிலையில் முனிவரால் எழுந்திருக்கவும் முடியவில்லை. மிக வருந்தினார்.

முனிவர் எத்தனையோ சோதனைகள் செய்தும், நளாயினி சிறிதும் மனம் கோணவில்லை. அவரது தேகத்தை அடிக்கடி வெந்நீரால் கழுவிச் சுத்தம் செய்தாள். அவருக்கு உகந்த உணவுகளைச் செய்துகொடுத்து கீழே பெருகும் அசுத்தங்களை யெடுத்தெறிந்து அடிக்கடி சுத்தப்படுத்தினாள். எப்பொழுதும் தன் நாயகன் அருகிலேயே இருந்து அவருக்குப் பணிவிடை செய்து வந்தாள். தன் நாதன் உடலினின்று வீசும் துர் நாற்றத்தை, அவள் இனிய மலர்மணமாக எண்ணி நுகர்ந்தாள். தன் நாயகனது உடல் நோயைத் தீர்த்து, தனக்குத் தீர்க்க மாங்கலியம் அருளுமாறு பிரார்த்தித்து வந்தாள்.

இந்நிலையில் மீண்டும் தம் மனைவியைப் பரிசோதிக்க விரும்பிய முனிவர் தான் அவள் புரி



யும் எவல்களில் மகிழ்ச்சி கொள்ளாதவர்போல் அவளைப் பழித்துப் பேசினார். தன் நாதனது கோபமொழிகளை இன்மொழிகளாகவே நளாயினி ஏற்றுக்கொண்டு அவர் விரும்பியவற்றையெல்லாம் புரிந்துவந்தாள்.

பின் ஓர் நாள், முனிவர் ஒரு தாசியின் பெயரைக் கூறி அவள் வீட்டில் தன்னை விடுத்து, பின் அழைத்து வரும்படி நளாயினியிடம் சொன்னார். நளாயினியும் சிறிதும் வருந்தாமல் அவர் கோரிக்கைப்படியே அவரை ஒரு கூடையில் வைத்து இரவு வேளையில் சிரமப்பட்டு வழியறிந்து அத்தாசியின் அகத்தில் அவரைக் கொண்டுபோய்க், கூடையைக் கீழே இறக்கிவைத்து வெளிவந்து விட்டாள். பின் முனிவர் உட்சென்று தாசியிடம் தம்மனைவியின் கற்பைச் சோதிப்பதற்காகவே தாம் அங்கு வந்ததாய்க் கூறிவிட்டு, சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பவும் அக்கூடையில் வந்து அமர்ந்து, தம்மை ஆசிரமத்திற்கு எடுத்துப்போகும்படி நளாயினிக்குக் கட்டளையிட்டார். நளாயினியும் கூடையை எடுத்துக்கொண்டு மெதுவாய் தன் ஆசிரமத்தை நோக்கி வந்தாள். நள்ளிரவு ஆகையாலும் தன் நாயகனது ஆசிரமம் தவிர வேறொன்றையும்

அவள் அறியாள் ஆதலாலும் வழிதெரியாமல் சற்றுத்திகைத்தாள். பின் ஒருவாறு வழியை யறிந்து நடந்தாள்.

இளமையிற்செய்த ஜீவஹிம்சையின் பயனாய் மாண்டவ்யர் என்னும் முனிபுங்கவர் அங்கு கழுவேற்றப்பட்டிருந்தார். கழுவிலேற்றப்பட்ட முனிவர் உயிர் துடித்துக்கொண்டிருக்கையில், நளாயினி கொண்டு சென்ற கூடை அவரது காலிற்பட்டது. உடனே அவருக்கு அதிக வேதனையுண்டாயிற்று. அதையறிந்த நளாயினி தான் இருட்டுவேளையில் தெரியாமற் செய்த குற்றத்திற்குவருந்தினாள். மாண்டவ்விய முனிவரும் அவ்வாறு செய்தவள் ஒரு பெண்பாலென அறிந்து மிகுதியான கோபங்கொண்டார். உடனே அவர் தன்னை அவ்வாறு துன்புறச் செய்தவள் யாராயினும், பொழுது விடிந்தவுடன் மாங்கலியம் இழக்கவேண்டும் என்று சாபம் கொடுத்தார். அதை அறிந்த கற்புக்கரசியாகிய நளாயினி தன் நாதனையிழக்க வருந்தினவளாய் "பொழுது விடியாமலேயே இருக்கக் 'கடவது' என்றாள். அவள் கற்பின் மகிமையால் மறுநாள் சூரியன் உதிக்கவே யில்லை. சூரியனும் அவள் கற்பிற் கட்டுப்பட்டான். உலகில் வெளிச்சமின்றி மானிடர் படும் துன்பத்தை அறிந்த முனிவரும்



தேவர்களும் நளாயினியிடம் அவளது சாபத்தை நீக்கும்படி வேண்டினர். மாண்டவ்வியர் தனக்கீந்த சாபத்தை மாற்றினாலொழியத் தானும் தன் வாக்கை மாற்றமுடியாதென்றாள் நளாயினி. பின் முனிவர்களது வேண்டுகோளின்படி மாண்டவ்வியரும் நளாயினியை தீர்க்க சுமங்கலியா யிருக்கும்படி வாழ்த்தினர். நளாயினியும் சூரியன் உதிக்கும்படி வாக்களித்தாள். தேவரும் முனிவரும் நளாயினியின் கற்பின் மகிமைக்காக அவளைப் புகழ்ந்தனர்.

மௌத்கல்யரும் தமது மனைவியின் பதிவிரதா தர்மத்தைப் பெரிதும் மெச்சி தன் இயற்கையான சுந்தரவடிவுடன் அவளிடம் அன்புகொண்டு ஒழுகினார். நளாயினியும் தன் நாதனைக் கண்டு மகிழ்ந்தாள். எல்லா வுலகங்களும் எல்லையில்லாத மகிழ்ச்சியை யடைந்தன.

---

## 6. தாரை

நம் நாட்டில் கற்பிற் கணிகலமாகக் கொண்டாடப்பெறும் மாதர் ஐவருள் தாரையும் ஒருத்தி, அவள் வாலி என்னும் வானர ராஜனது உத்தம மனைவி. அவள் தன் நாயகனிடத்தில் உயர்ந்த பக்தியோடிலகிய உத்தமி.

அவளது நாயகனான வாலி தன் இளைய சகோதரனாகிய சுக்ரீவன் மீது மிகுதியான பொறாமையும் கோபமும் கொண்டு அவனை அநியாயமாக நாட்டை விட்டுத் துரத்தினான். மேலும் அவன் தன் தம்பி சென்ற இடங்களுக்கெல்லாம் அவனைத் தொடர்ந்து சென்று அவனைக் கொல்லவும் கருதினான், கடைசியில் சுக்ரீவன் ஓர் சாபத்தால் வாலியணுக முடியாத இருஷியமூக பர்வதம் சேர்ந்து அங்கு வாழ்ந்து வந்தான்.

வாலிசெய்வது அநியாயமென்று தாரையின் மனதிற்பட்டது. உடனே அவள் தன் மைத்துனனை ஆதரிக்கும்படி அவனை எவ்வளவோ வேண்டினாள். வாலி மடியவேண்டிய காலம் நெருங்கி விட்டபடியால், அவள் கூறிய மொழிகள் அவன் காதில் விழவில்லை.

பின் சுக்ரீவன்மீது இரக்கம்கொண்ட இராமர் வாலியைக் கொல்ல நிச்சயித்தார். அப்பொழுது சுக்ரீவன் மலையின் கீழிறங்கிவந்து, வாலியைப் போருக்கழைத்தான். அப்பொழுது தாரையின் அந்தப்புறத்தில் இருந்த வாலி மிக்க கோபத்துடன் போருக்கெழுந்தான். அப்பொழுது கற்பரசியாகிய தாரை அவனைத் தடுத்து "நாயக! இதுகாறும் தம்முடன் போருக்கு வரத்



துணியாத சுக்ரீவன் இன்று இவ்வளவு ஆரவாரத்தோடு வந்திருப்பதைக் காணும் பொழுது, தங்களைக்காட்டிலும் வலிய துணைவரை உடன் கொண்டுவந்து யிருப்பதாகவே என் புத்தியிற் படுகிறது. இச்சமயம் தாங்கள் அவருடன் போர் செய்யச் செல்வதில் எனக்குச் சிறிதும் சம்மதமில்லை. மேலும் தசரத புத்திரராகிய இராம லக்ஷ்மணர் அங்கு வந்திருப்பதாக அங்கதன் மூலம் அறிந்தேன். அவர்களையே துணைவராகக் கொண்டு சுக்ரீவர் வந்திருக்கலாம். தாங்கள்செய்தது அநியாயம் ஆதலின் இராம லக்ஷ்மணர் தங்களைக் கொல்லத் துணிந்திருக்கலாம். தங்கள் சகோதரர் மீது தங்கள் கோபத்தை யொழித்து அவரை ஆதரியுங்கள். மகா உத்தமராகிய இராம லக்ஷ்மணரை சிநேகர் ஆக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் கடவுளரேயாவர். தங்களைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு வல்லமை வாய்ந்த மகா புருஷர்கள்" என்று கூறினாள்.

வாலி தன் கெடுகாலத்தால் இவ்வுரைகளை யிகழ்ந்து பேசி சுக்ரீவனுடன் போர்செய்யப் புறப்பட்டான். அப்பொழுதும் தாரை தாரை தாரையாய்க் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு தாரை தடுத்தாள். அவளை உதறித் தள்ளிவிட்டு வாலி

யுந்தத்திற்குச் சென்று அங்கு இராமபாணத்தால் மடிந்தான். இறக்கும் பொழுதுதான் தாரை உரைத்த மொழிகள் உண்மையென்று நினைத்தான்.

தன் நாயகன் மடிந்ததை யறிந்த தாரை எல்லையற்ற சோகக் கடலிலாழ்ந்தாள்.

இதனால் தக்க இன்ன தகாதன இன்னவென்று உணர்ந்துரைக்கும் மனைவி பெறுதற்கரிய பேறுவாள் என்று அறிக. அரசனுக்கு மந்திரியைப்போன்று புருஷனுக்கு மனைவி நன்மை தீமை அறிந்து அறிவிக்கவும் வேண்டும்.

---

## 7. தமயந்தி

பூர்வம் நமது பரத கண்டத்தில் பேர்பெற்று விளங்கிய தேசங்கள் பலவற்றுள் விதர்ப்ப தேசமும் ஒன்று. அது நீர்வளம் நிலவளம் முதலிய பலவளங்களாலும் சிறந்து விளங்கியது. அத் தேசத்தை வீமன் என்ற ஒரு மகாராஜன் ஆண்டு வந்தான். அவனுக்கு அவன் செய்த தவத்தின் பயனாய் ஒரு பெண் பிறந்தாள். அவளுக்கு அரசன் தமயந்தி எனப்பெயர் சூட்டினான். குழந்தையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தாள்.



ஒரு நாள் தமயந்தி தன் உத்யான வனத்தில் உலவிக்கொண்டிருக்கையில் ஓர் அழகிய அன்னத்தைக் கண்ணுற்றாள். அதைப் பிடிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் தமயந்தி தன்னுடன் வந்த தோழிகளைப் பிரிந்து அன்னத்தைத் தொடர்ந்தாள். அன்னம் தனிமையாய் கொஞ்ச தூரம் அவளை அழைத்துச்சென்று அவள் கையில் வந்தமர்ந்து பின் வருமாறு கூறிற்று "நேரிழையே! உலகத்திற் சிறந்த நிடதேசத்தின் இறைவனாகிய நளன் உனக்கு ஏற்றமணாளனாவான். உன் அழகைக் கண்டவுடன் இதனை உனக்குச் சொல்லும்படி என் மனம் என்னைத் தூண்டுகின்றது. அந்நளன்,

"செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கை
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்-மெய்மை [யர்கள்
நளனென்பான் மேனிலத்தும் கானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு"

இவற்றைக் கேட்டது முதல் தமயந்தி நளன்மீது அளவுகடந்த காதல் கொண்டாள். அன்னமும் அகன்றது. அதுமுதல் காமநோய் தமயந்தியைப் பற்றியது; நாளுக்கு நாள் உடல் மெலிந்தாள்.

தக்க பருவமடைந்த தன் மகளுக்கு வீமன் சுயம்வரத்தை ஓர் சுபதினத்தில் நிச்சயித்தான். சுயம் வரமாவது ஒருகன்னிகை தனக்கு இயைந்த மணாளனைத் தானே தேர்ந்துகொள்ளுதல். தமயந்திக்கு சுயம்வரம் என்று பறைசாற் அப்படி வீமன் பல திசைகளிலும் பலதூதரைப் போக்கினான். அவர்களும் நாடுகள் தோறும் சென்று பறை சாற்றினர்.

தமயந்திக்குச் சுயம்வரமென்ற செய்தியை அறிந்து பலநாட்டரசிளங் குமரரும் தங்களைப் பலவிதமாய் அலங்கரித்துக்கொண்டு வீமன் திருநகரடைந்தனர். நிடதநாட்டரசனாகிய நளச்சக்கிரவர்த்தியும் தமயந்தியை மணக்க எண்ணித் தன் ஒப்பற்ற தேர்மிசையேறி, விதர்ப்பதேசத்தின் தலைநகராகிய குண்டினபுரியை நோக்கிச்சென்றார். தமயந்தி ஒப்புயர்வற்ற அழகுடையவள் ஆகையின் இந்திராதி தேவரும் அவளை மணக்க விரும்பி ஆகாயமார்க்கம் இறங்கிவந்தனர். வரும் வழியில் அவர்கள் நளனைக் கண்டனர். நளனைக் கண்ணுற்ற தமயந்தி தம்மை விரும்பாள் என்பது அவர்களது மனத்திற்பட்டது. பின் அவர்கள் நளனைத் தமது தூதனாகத் தமயந்தியிடம் அனுப்ப நிச்சயித்து, விரைந்து அவன் தேர் முன் வந்தனர். தன் முன் வந்தவர் தேவர்கள்



என நளன் அறிந்துகொண்டு முறையே அவர்களை வணங்கினான். அவர்களும் அவனை வாழ்த்தி, தமது விருப்பத்தைக் கூறினர். நளனும் தமயந்தியை மணக்கவே வந்தவன் ஆயினும், விதிப்படி எஃதும் முடியும் என்று கருதி, தேவர்களுக்குத் தூதாகச் செல்ல இசைந்தனன். தேவரும் பிறர் கண்ணிற்படாது செல்ல ஓர் மந்திரம் நளனுக்கு அருளினர். நளனும் பலகாவல்களையும் மந்திரபலத்தாற் கடந்து தமயந்தி தனிமையாயிருந்த கன்னிமாடம் வந்து சேர்ந்தான்.

பலகாவல்களையும் கடந்து தன்முன் ஓர் ஆடவன் நிற்பதைக்கண்டு தமயந்தி சற்று திகைத்தாள். ஆயினும் அன்னம் கூறிய அழகுகள் எல்லாம் அமைந்திருக்கக்கண்டு, ஓர் வேளை அது தன் காதலனது உரு வெளித் தோற்றமாயிருக்குமோ என்று மயங்கினாள்.

பின் நளன் பேசலுற்றான்: அவன் தமயந்தியை நோக்கி அவளை மணக்க, இந்திரன் அக்கினி வருணன் இயமன் ஆகிய நான்கு தேவர்களும் விரும்பியிருப்பதாகவும் தான் அவர்களால் ஏவப்பெற்ற தூதன் என்றும் கூறினான். உடனே தமயந்தி அவனைநோக்கி, தான் நிடதர் கோனை

கிய நளமகாராஜனையே கணவனாய் நினைத்திருப்பதாயும், வேறெவரையும் மணக்க முடியாதென்றும் கூறிவிட்டாள். நளன் தேவரது உயர் குணங்கள் பலவற்றையும் எடுத்துக்கூற மகாபதிவிரதையாகிய தமயந்தியின் மனம் மாறவில்லை. பின் அவ்விடத்தை விட்டகன்று தேவர்களிடம் நடந்த செய்திகளை அறிவித்தான். பின் தேவர்களது அநுமதியின்பேரில் நளனும் குண்டினபுரி யடைந்தான்.

குறித்த சுபதினத்தன்று குறித்த வேளையில் தாதியா தமயந்தியை பல ஆபரணங்களாலும் அலங்காரம் செய்து பல அரசர்கள்கூடி இருந்த சுயப்வர மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். அப்பொழுது தமயந்தி மன்னர்களது விழிகளாகிய தாமரைகளை மலரச் செய்யவந்த சூரியனை ஒத்தாள். அவள் கையில் சுயம்வர மாலை இருந்தது. தாதியர் ஒவ்வொரு அரசரையும் இன்னார் இன்னாரெனத் தெரிவித்து வந்தனர்.

இத்தருணம் தமயந்தியைப் பரிசோதிக்கக் கருதிய தேவர் நால்வரும் நளனுடைய வடிவம் தாங்கி அவனருகிலேயே நின்றனர். நளனிடம் வந்ததும் தாதியர் திகைத்து நின்றனர். தமயந்தியோ அது தேவர்களது மாயமே என்றறிந்து



தயவுகூர்ந்து விலகி நளனைத் தனக்குக் காண்பிக்கும்படி வேண்டிக்கொண்டாள். தமயந்தியின் உயர்ந்த கற்பின் பெருமையைக் கொண்டாடி தேவர்கள் அகன்றனர். தமயந்தி நளனுக்கு மாலைசூடினாள். அப்பொழுது அந்தர துந்துபி முழங்கிற்று. விதர்ப்பதேசம் முழுவதும் தமயந்தியின் சுயம்வரத்தைக் கொண்டாடின.

பின், வீமன் பலசீர் வரிசைகளுடன் தன் மகளை நளனுடன் அனுப்பினார். நிடத நாட்டின் தலைநகராகிய மாவிந்தத்தில் தம்பதிகளிருவரும் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். நாளடைவில் ஆணும் பெண்ணுமாய் இரண்டு குழந்தைகள் அவர்கட்கு உதித்தன. அவர்களுக்கு முறையே இந்திரசேனன் இந்திரசேனை யெனப் பெயர் சூட்டினர். அனைவரும் சுகமே வாழ்ந்தனர்.

நிற்க, தமயந்தியின் மணமாலைபெறாமல் திரும்பித் தம் நாட்டிற்குச் செல்லும் வழியில் தேவர்கள் மிக ஆத்திரமாய் ஓடிவரும் கலிபகவானைக் கண்ணுற்றனர். அவர்கள் உடனே அவனை நிறுத்தி அவன் அவசரமாய்ச் செல்லும் இடத்தை வினவினர். அதற்கு அவன் தான் தமயந்தியின் சுயம்வரத்திற்குச் செல்வதாய்

மொழிந்தான். அதைக்கேட்டதும் தேவர்கள் நகைத்து தமயந்தி நளனை மணந்ததை உரைத்தனர்.

உடனே கலியனுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று. எப்படியேனும் நள தமயந்தியரைத் துன்பப்படுத்துவதாய்க் கூறி அகன்றான். பின் அவன் நளனது பங்காளியான புஷ்கரனையடைந்து, நளனுடன் சூதாடும்படியும் தான் அவனுக்கு அவ்வாட்டத்தில் வேண்டிய உதவி செய்வதாயும் மொழிந்தான். புஷ்கரன் அதற்கு உடன்பட்டு நளனுடன் சூதாடச்சென்றான்.

நளனும் சூதாட்டத்தில் மிக்க விருப்பங் கொண்டவன். புஷ்கரன் நளனைச் சூதாட அழைக்கவே நளனும் இசைந்தான். இதையறிந்த அவனது அமைச்சர் பலரும், அவனிடம் சென்று,

"காதல் கவறுடல் கள்உண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டாய் நெறி."

"எள்ளுக சூதினை இகலிவென்ற தூரம்
கள்ளமேற் கொடுவலை காந்து வேட்டுவர்
உள்ளுற அமைத்திடும் உணவை ஓர்கிலாப்
புள்ளினம் அருந்தின போலும் என்பவே."



என்ற சூதாட்டத்தின் கேடுகளை பலவாறாக எடுத்துரைத்தனர். கலியின் மாயையால் நளன்மனம் மாறவில்லை.

தன் நாயகன் சூதாட இசைந்ததை அறிந்த தமயந்தி தன் தாதியர் மூலம் மன்னனைத் தன்னிடம் அழைக்க முயன்றாள். முடியவில்லை. பின் விதிப்படி நடக்கும் என்று கருதி அவள் வாளா இருந்தாள்.

சூதாட்டத்தில் நளன் கலியின் வஞ்சனையால் நாடு நகரம் முதலிய யாவற்றையும் தோற்றான். பின், புஷ்கரன் நளன் தன் நாட்டில் இருக்கவும்கூடாதென்றான். அவனுடன் பேசும் ஜனங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்றான்.

முன் அரசனாய் வாழ்ந்த நாட்டில் எல்லாவற்றையும் தோற்றபின் வாழ்பவனா நளன்? ஆதலின் உடனே காடு செல்லத் தயாரானான். தமயந்தி நளன் அனைத்தையும் சூதில் தோற்றதை யறிந்து, நளனது சாரதியிடம் தன் குழந்தைகளைக் குண்டினபுரியில் தன் பிதாவிடம் விட்டு வரும்படி கூறி ஒப்புவித்துவிட்டு தானும் காடு செல்லும் நளனைத் தொடர்ந்தாள். நளன் கலியின் வஞ்சனையால் பித்துப்பிடித்தவன்போன்று

இருந்தான். தமயந்தியும் வனத்தில் நடத்தலினால் நேரும் துன்பங்களைச் சிறிதும் எண்ணாமல் தன் நாயகனுடனே சென்றாள்.

வழியில் இருவரும் அழகிய அன்னப் பறவை யொன்றைக் கண்ணுற்றனர். நளன் அதைப்பிடிக்கும் நோக்கத்தோடு தான் அணிந்திருந்த ஆடையை அதன்மேல் வீசினான். அவ்வன்ன வடிவுகொண்ட கலி அவ்வாடையுடன் பறந்துசென்றான். பின் தமயந்தி அணிந்திருந்த ஒற்றைத் துகிலையே இருவருமாக உடுத்திக்கொண்டு நடந்தனர்.

நடுக் கானகத்தில் நள்ளிருள். பேய் பிசாசுகள் சஞ்சரிக்கும் தருணம். பல மிருகங்களும் பறவைகளும் அடங்கிவிட்டபடியால் காடு முழுதும் நிச்சப்தமாயிருந்தது. சமயங்களில், இரவில் சஞ்சரிக்கும் புலி சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களின் கொடுங்குரல் மாத்திரம் கேட்டது. இத்தருணம் இருவரும் ஒரு பாழ்மண்டபத்தையடைந்தனர். அங்கு மிகச் சோர்ந்திருந்த தமயந்தி தன் நாதன் மடியில் தலைவைத்து உறங்கினாள். அத்தருணம் கலி வசப்பட்டவனாகிய நளன் அவளைத் தனியேவிட்டுவிட்டு அகன்றான்.



சிறிது நேரத்திற் கெல்லாம் தமயந்தி விழித்துக்கொண்டாள். தன் நாதனைக் காணாமல் திகைத்தாள். ஓர் வேளை விளையாட்டிற்காக ஒளிந்திருக்கிறாரோ என்றெண்ணினாள்.
உடனே அவள்,

"சேரலார் போரேறே நிடத்தார் கோமானே
ஆரவரை மார்பா அளியே னுயிர்க்குயிரே
காரிருள்வாய் யான்புலம்பக் கானகத்து விட்டகன்றும்
சாலையால் இன்னும் இதுவோநின் தண்ணளியே"

என்று ஓலமிட்டாள். பதில் இல்லை.

பின்னும் அவள் பயந்து, மிருகங்களையும் பறவைகளையும் நோக்கி,

"வாவுமிள மான்காள் மயில்காள் மடப்பிடிகாள்
கூவுங்கரிய குயிலினங்காள் மென்புள்ளினங்காள்
ஆவியெனமேவி அகலேம் என அகன்ற
காவலன் தான்போன வழியெனக்குக் காட்டீரே"

என்று பல பன்னிக் கதறினாள். ஏனென்று கேட்பார் எவரும் இல்லை. அப்பொழுது தமயந்தி தன்னைக் காரிருளிற் கானகத்துக் கைவிட்டுச் சென்ற காவலனை வெறுக்காமல்

"மன்னவனே இப்பிறப்பிற் கண்டு மணந்திலனேல்
இன்னம் ஒருபிறப்பில் ஆனாலும் ஏழையேன்
தன்னந் தனியே இருந்ததவ மாற்றியும்உன்
பொன்னகல முள்ளுருகப் புல்லா தொழிவேனோ"

என்றாள். அப்பொழுது தமயந்தி,

"கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்"

ஆயினாள். என்னே அவளது நாயக பக்தி? அத்தருணம் துஷ்டமிருகங்கள் பல அவளைச் சூழ்ந்தன. ஆயினும் அவள் கற்பின் மகிமையால் ஒன்றும் அவளை அணுகவில்லை.

அவ் விருளிலேயே தமயந்தி கானகம் முழுதும் பித்துப் பிடித்தவள்போல் அலைந்து திரிந்தாள். வழியில் அவள் ஒரு மலைப் பாம்பின் வாயில் அகப்பட்டுக்கொண்டாள். அத்தருணம் அவளை வேடனொருவன் காத்தான். பின் அவன் தீய எண்ணமுடையவனாய்த் தோற்றியமையின் தமயந்தி தன் சொல்லால் அவனைச் சாம்பராக்கினாள். பின் அவள் பல துன்பங்களை யடைந்து தன் சிற்றன்னை வாழ்ந்து வரும் சேதி நாடடைந்தாள்.



அங்கு அவள் பித்திபோல் தெருக்களில் அலைந்து கொண்டிருந்தாள். பின் அவ்வூர் அரண்மனையில் தன் சிற்றன்னை புதல்வியாகிய சுநந்தையின் தோழியாய் அமர்ந்தாள்.

ஓர் நாள், வீமனால் நளன் தமயந்தியரைத் தேடுமாறு அனுப்பப்பெற்ற அந்தணனொருவன் அவளை யறிந்து அழைத்துச்சென்று அவளது தந்தையிடம் சேர்த்தான். அங்கும் தமயந்தி ஏற்ற உணவு கொள்ளாமல் மிகுந்த சோகமுடையவளாய் வசித்து வந்தாள். தன் மகளது வருத்தத்தைக் கண்டு சகியாத வீமன் நளனைத் தேடி வரும்படி நாலு திக்குகளிலும் ஒற்றரை யனுப்பினான். நாளடைவில் நளன் அயோத்தியில் இருப்பதாய்த் தெரியவந்தது.

பின் தமயந்தி தன் தந்தைக்குத் தெரியாமலே தனக்கிரண்டாம்சுயம்வரம்என்று அயோத்தி வேந்தரிடம் சொல்லி வரும்படி அந்தணனொருவனை ஏவினாள். அவனும் அங்கு சென்று வேந்தனாகிய உருதுபன்னனிடம் அவ்வாறே மொழிந்தான்.

உடனே உருதுபன்னன் தன்னிடம் சாரதியாயிருந்த வாகுவன் என்று மாறுபெயர் பூண்ட நளனைத் தனக்கிசைந்த தேர் கொணருமாறு

சொல்ல, வாகுவனும் இயைந்த குதிரைகள் பூட்டப்பெற்ற தடந்தேரினைக் கொணர்ந்தான். உருதுபன்னன் தேரில் ஏறிக்கொள்ள, நளன் வேகமாய்த் தேரைச் செலுத்தினான். வழியில் கலி நளனை நீங்கினான். பின் அனைவரும் குண்டினபுரி அடைந்தனர்.

அங்கு உருதுபன்னனைத் திடீரெனக் காணவும் வீமன் ஒன்றும் தெரியாமல் திகைத்து, அவன் வரவின் காரணத்தை வினவினான். உருதுபன்னன் வெட்கி வீமனைக்கண்டு செல்ல வந்ததாகவே கூறினான். பின் வாகுவன் குதிரைகளைத் தேரினின்றும் அவிழ்த்து, அவைகளுக்கு இரை போட்டுவிட்டு, தன் அரசனுக்குச் சமையல்செய்வதற்காகச் சமையல் அறைக்குச் சென்றான். அங்கு நளனது மைந்தனும் புதல்வியும் வந்தனர். வாகுவன் அவர்களைத் தன் மார்புறத்தழுவி விடுத்தான். பின் தமயந்தியின் கோரிக்கைப்படி நளன் தான் தன் அரசனுக்காகச் சமைத்த உணவில் ஓர் சிறிது தமயந்திக்கு அனுப்பினான். இச்சோதனைகளால் தமயந்தி வாகுவன் நளனே என்று நிச்சயித்தாள். ஆயினும் அவனது விகாரமான வடிவு அவளை சந்தேகமுறச் செய்தது. பின் அவள் அம்மாறுவடிவம் வேண்டுமென்று நளன் அடைந்திருக்கலாம் என்று கருதி, தன் தந்தையிடம் தன் கருத்தைக் கூறினாள்.



பின் வீமன் வாகுவனிடம் சென்று அவனது சுய உருவைக் காட்டுமாறு வேண்டினான். உடனே,

"மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்பாகப்
புக்கோர் அருவினைபோல் போயிற்றே—அக்காலம்
கானகத்துக் காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு"

வாகுவன் பழைய நளனாய் நின்றான். தமயந்தியும் குழந்தையரும் அவனைத் தழுவி மகிழ்ந்தனர். உருதுபன்னனும் தான் செய்த பிழைகளுக்குத் தன்னை மன்னிக்கும்படி நளனை வேண்டினான். நளனும் தனக்கு அவன் புரிந்த பல உதவிகளுக்காக அவனுக்கு வந்தனம் செலுத்தினான்.

பின் நளன் தன் மனைவி மக்களுடன் மாவிந்தமடைந்து, புஷ்கரனுடன் மறு சூதாடி வென்று, யாவரும் களிக்க நாட்டைப் புரந்தான். தமயந்தியும் கற்புடை மகளிருக்குத் திலகமாய் விளங்கினாள்.

---

# 8. வாசுகி

திருக்குறள் பாடிய திருவள்ளுவனாருக்கு ஒரு மனைவி யிருந்தாள். அவள் வாசுகியென்னும் பெயரினள். அவள் எப்பொழுதும் தன் நாயகனுக்கு வேண்டுவனவற்றைச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தாள். கணவனையே தனது தெய்வமெனக்கருதி வழிபட்டாள்.

ஓர் நாள் திருவள்ளுவர் தமது மனைவியின் கற்பை உலகிற்கு விளக்கும்பொருட்டு ஒரு சோதனை செய்தார். அவ்வம்மணி காலை யுணவிற்காகப் பழைய அன்னம் படைத்தாள். அச்சமயம் திருவள்ளுவர் அதிற் கரம்வைத்து சுடுவதுபோற் பாசாங்கு செய்து, "சோறு சுடுகிறது" என்றார். உடனே அவ்வம்மாள் கையில் விசிறி கொண்டு, சோற்றின்மீது காற்றுப்படும்படி மெல்லென வீசினார். அப்பொழுது அப்பழையசோற்றினின்றும் அவரது கற்பின் பெருமையால் புகை கிளம்பிற்று.

மற்றும் ஓர் நாள் வீட்டில் விறகில்லாதிருக்கும் சமயத்தில் திருவள்ளுவர் தமக்கு புதிய உணவு சமைத்துப் படைக்கும்படி தம் மனைவிக்



குக் கட்டளையிட்டார். அப்பொழுது அவ்வம்மாள் வீட்டுக் கொல்லையில் சாய்ந்திருந்த பச்சை வாழையை முறித்து அதனை அடுப்பில் வைத்து ஊத அது உலர்ந்த விறகுபோலப் புகைந்து ஒளிவிட்டெரிந்தது.

இன்னும் ஓர் நாள் தம் மனைவி கொல்லைக் கிணற்றில் தண்ணீ ரிறைத்துக்கொண் டிருக்கையில் திருவள்ளுவர் அவளை அழைத்தார். அப்பொழுதுதான் அந்த அம்மாள் கிணற்றிலிருந்து தண்ணீர் முகந்த தோண்டியை உயரத் தூக்கிக் கொண்டிருந்தார். தன் நாயகன் தன்னை யழைக்கும் குரல் காதில் விழுந்ததும் அப்படியே கயிற்றைப் பாதியில் விட்டுவிட்டு வெகு விரைவாய் உள்ளே ஓடிவந்து தன் நாதனுக் குகந்தவற்றைச் செய்துமுடித்துத் திரும்பிச்சென்றார். அப்பொழுது அத்தோண்டி அவளது கற்பின் மகிமையால் முகந்த தண்ணீருடன் கிணற்றின் பாதியளவிலேயே நின்றுகொண்டிருந்தது.

ஓர் நாள் திடீரென்று அவ்வம்மணி இறந்தாள். அப்பொழுது திருவள்ளுவர் அடைந்த துக்கத்திற்கு எல்லையில்லை. அவ்வம்மணி தகனம் செய்வதற்காக எடுத்துச் செல்கையில் திருவள்ளுவர்·

"அடிசிற் கினியாளே அன்புடையாளே
படிசொற் கடவாத பாவாய்-அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்றூங்கு மென்கண் இரா" என்று

அலறித் துக்கித்தார்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண்டாகப் பெறின்"

என்னும் குறள் வெண்பாவை அவர் தமது மனைவியை நினைத்தே கூறினர் போலும்.

---

## 9. கண்ணகி

முன் காவிரிப்பூம் பட்டினம் என்னும் ஊரில் மாசாத்துவான் என்னும் ஒரு வைசியனுக்கு கோவலன் என்று ஒரு குமாரன் இருந்தான். அவன் தன் தந்தைக்கு ஒரே செல்வக்குமாரன். மாசாத்துவான் மிக்க செல்வவந்தன். ஆதலின் கோவலனை மிகச் செல்வமாய் வளர்த்து வந்தான்.

தன் மகனுக்குத் தக்கவயது வரவே மாசாத்துவான் தன் குலத்திலேயே உதித்த கண்ணகி என்னும் ஒரு மாதினை மணம் புரிவித்தான். இருவரும் சந்திரனும் உரோகணியும்போல் இனிது வாழ்ந்து வந்தனர்.



ஒருநாள், கோவலன் அரச சபைக்குச் சென்று, அங்கு ஆடல்புரிந்த மாதவி என்னும் தாசியின்மீது மையல் கொண்டான். சீக்கிரம் அவளிடன் சிநேகம் செய்துகொண்டு கோவலன் தன் உத்தம மனைவியாகிய கண்ணகியைப் பெரிதும வெறுத்தான் அவன் மாதவியிடத்திலேயே தன் காலத்தைக் கழித்து வந்தான். ஆயினும் கண்ணகி அவன்மீது சிறிதும்வெறுப் படையவில்லை, அவனையே தன் கடவுளாகக் கருதினள்.

ஓர் நாள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் விளையாட்டாக மாதவி கோவலன் மனம் புண்படும்படி நடந்துகொண்டாள். உடனே கோவலன் தாசியர் தன்மை இன்னதென அறிந்துகொண்டு அவளைவிட்டு நீங்கினன்.

பின் அவன் கற்பையே ஆபரணமாகப் பூண்டு விளங்கும் தன் மனைவி கண்ணகியை அடைந்து அவளது கலங்காத கற்புநிலையைப் புகழ்ந்தான். அத்தருணம் கண்ணகி மாதவிக்குக் கொடுக்கப் பணம்பெறவே தன்னிடம் வந்திருப்பதாய்க்கருதி, அவனது மகிழ்ச்சியையே தன் மகிழ்வாகக்கொண்டு தனது காற்சிலம் பொன்றைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள். உடனே

கோவலன் பெரிதும் வருந்தி, மாதவியிடம் தனக்குச் சிறிதும்விருப்பமில்லையென்றும், அதுகாறும் தான் அறிவிழந்து செய்த செய்கைகளுக்குத் தன்னை மன்னிக்கும்படியும் வேண்டிக்கொண்டான். மேலும் கோவலன் கண்ணகியுடன் மதுரைசென்று அவளது சிலம்பைவிற்று, அப்பொருளைக்கொண்டு வாணிபம் செய்ய விரும்புவதாயும் கூறினான். கண்ணகியும் இசைந்தாள். பின் இருவரும் மதுரை நோக்கி நடந்தனர்.

செல்லும் வழியில் அவர்கள் கவுந்தி என்னும் தவமூதாட்டியைக் காண அவளும் அவர்களுடன் மதுரைக்கு வந்தாள். மதுராபுரிக்குள் செல்லும் முன்னமே அவர்கள் மாதாரி என்ற இடைக்குல ஸ்திரீயைக் கண்ணுற்றனர். மாதாரி மிகவும் நல்லவள். ஆதலின் மூவரையும் தன் இல்லிற்கழைத்துச் சென்று பலவாறு உபசரித்தாள். அங்கு மூவரும் சில நாட்களை இனிதாய்க் கழித்தனர். பின் ஓர் நாள் கோவலன் கண்ணகியை நோக்கி "பெண்மணி! நான் எண்ணியவாறு மதுரைக்குள் சென்று சிலம்பை விற்றுத் திரும்ப விடை கொடுப்பாயாக" என்றான்.

உடனே கண்ணகி அதற்கிசைந்து, தனது சிலம்பொன்றைக் கழற்றி அவன் கையில் ஈந்



தாள், கோவலனும் மதுரைக்குள் சென்றான். செல்லும்பொழுதே அவனுக்கு பல அபசகுணங்கள் தோற்றின. ஆனால் அவன் அவற்றைப் பொருட்படுத்தவில்லை.

மதுரைமா நகரடைந்த கோவலன் அங்கு முதன் முதல் ஒரு தட்டானைக் கண்ணுற்றான். அவனிடம் கோவலன் சிலம்பைக்காட்டி தான் அதை விற்றுப் பொருள் செய்ய வந்ததாய்க் கூறினான்.

அக்கொல்லன் ஓர் சமயம் அந்நாட்டிறைவனது மனைவியின் காற்சிலம்பொன்றைத் திருடிவிட்டான். அது மிக விலையுயர்ந்தது. அதைத் தேடுவதற்காக அநேகர் அரசனால் நியமிக்கப்பட்டனர். ஓர்வேளை தன்னை அவர்கள் திருடனெனக் கண்டுபிடித்தால் தனக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்பதை அவன் திண்ணமாய் அறிந்தவனாதலால், எப்படியேனும், குற்றம் செய்யாத அன்னியன் எவன்மீது பழியைச் சுமத்தவேண்டும் என்று காத்திருந்தான். கோவலன் கொணர்ந்த சிலம்பும் அநேகமாய் அரசியது சிலம்புபோலவே இருந்தபடியால் அவனையே குற்றவாளியாக்கக் கருதினான். உடனே அவன் கோவலனைத் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று

அங்கு அவனை இருத்தி, தான் அரசனிடம் சிலம்பைக்காட்டி விலைபெற்று வருவதாய்க் கூறி அகன்றான். கோவலனும் அதனை உண்மையெனக்கருதி அங்கேயே தங்கியிருந்தான்.

கோவலனிடம் சிலம்பைப் பெற்ற பத்தன் விரைந்து அரசனிடம் ஏகி அரசியது சிலம்பைத் திருடியவன் அதனை விற்பதற்காகத் தன்னிடம் வந்திருப்பதாய் மொழிந்தான். அரசனும் சிறிதும் விசாரியாமல், உடனே கொலையாளிகளை அழைத்து "பத்தன் காட்டும் சிலம்பு திருடியவனை வெட்டிமீள்க" என்று ஆணையிட்டான்.

கொலைஞர்கள் தன்னைத் தொடர்ந்துவர பத்தன் கோவலன் தன் வரவிற்காகக் காத்திருக்கும் தன் வீட்டிற்குச் சென்றான். அங்கு தன் வரவை வெகு ஆவலுடன் எதிர் பார்த்திருந்த கோவலனை அவன் கொலைஞர்களுக்குக்காட்டி அவனே திருடன் என்றும் அவனுடன் யாதும் பேசாமல் வெட்டி வீழ்த்தும்படியும் கூறினான்.

கொலைஞரிற் சிலர் அவன் முகம் கலங்கமற்றிருக்கக் கண்டு அவனை வெட்டத் துனியவில்லை. ஆனால் பத்தன், அரசனாணையை மீண்டும் எடுத்துக்கூறவே, ஒரு இரக்கமற்ற கொலைஞன், களங்கமற்ற கோவலனைப் பதைக்க வெட்டி வீழ்த்தினான்.



கோவலன் கொலையுண்ட அத்தருணத்தில் இடைக்குடியில் மாதரி வீட்டில் பல துர்க்குறிகள் தோற்றின. உடனே வழக்கம்போல் அவர்கள் அக்குறிகளுக்குப் பரிகாரமாக குரவைக் கூத்து ஆடினர். ஆனால் அச்சமயம் மதுரைசென்ற மாதரி கோவலன் கொலையுண்டதை அறிந்து வந்து, மிகுதியான துக்கத்துடன் கண்ணகிக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது கண்ணகிக்கு உண்டான துக்கத்திற்கு அளவில்லை; நடந்தசெய்தி முழுதையும் மாதரியிடம் கேட்டாள்; மூர்ச்சித்தாள்; எழுந்தாள்; தன் கணவனைக்குறித்து அலறினாள். எரியிற்பட்ட புழுப் போலத் துடித்தாள். இந்நிலையில் கண்ணகியைக் காணவும் இடைச்சேரி முழுவதும் துயர்க் கடலில் ஆழ்ந்தது.

கண்ணகிக்குத் துக்கத்துடன் கோபமும் பொங்கியெழுந்தது. உடனே அவள் அநியாயமான தன் நாயகன் பழிக்குப் பழிவாங்கக் கருதினாள்; விரைந்து மதுரை சென்றாள்; வெட்டுண்டு கிடந்த கோவலனைக் கண்ணுற்றாள். உடனே அவளுக்கு துக்கம் அதிகரித்தது. அச்சமயம் அவளது கற்பின் மகிமையால் கோவலன் உயிர் பெற்றெழுந்து சிறிதுநேரம் அவளுடன் பேசிக்

கொண்டிருந்து பின் கீழேவிழுந்து இறந்தான். அப்பொழுது நள்ளிரவு. பொழுதுவிடியும்வரை கண்ணகி தன் நாயகனது உடலருகே தாமதித்து சூரியன் உதித்தவுடன் அரசனிடம் சென்றாள். அப்பொழுது அவளது தலைவிரிந்து தொங்கிற்று. கண்கள் சிவந்து நீரைப்பொழிந்து கொண்டிருந்தன. இந்நிலையில், கற்பு என்னும் உயர்குணமும் அவள் முகத்தில் தாண்டவமாடிச் கொண்டு இருந்தது. இந்நிலையில் தன்னை நோக்கிவரும் கண்ணகியைக் காணவும் அரசன் நடுங்கினான். உடனே அவன் கண்ணகியை நோக்கி "மாதே! நினக்கு நிகழ்ந்தது யாது?" என வினவினான். உடனே கண்ணகி "பாண்டிய! என் ஆருயிர்க் காதலனிடத்து எக்குற்றம் கண்டு அவனை நீ கொன்றாய்!' என கோபத்துடன், வினவினாள். உடனே அரசன் அவள் வெட்டுண்டவனது மனைவியே என அறிந்துகொண்டு "பெண்ணே உன் கணவன் என் மனைவியின் சிலம்பைக் களவாடிய குற்றத்திற்கு ஏற்ற தண்டனை அடைந்தான்" என்றான்.

தன் கணவனை, கள்வனென்று அரசன் கூறியதும், கண்ணகிக்கு துக்கமும் கோபமும் அதிகரித்தன. அந்நிலையில் அவள் அரசனை



நோக்கி "அடா! கொடுங்கோற் சண்டாளா! யாதொரு பாவமும் அறியாத என் கணவனையா குற்றவாளியென்றாய் எனலும் அரசன் பத்தன் தன்னிடம் ஈந்த சிலம்பை அவளிடம் காட்டினான். கண்ணகி அதனைக்கையில் வாங்கி "முறையற்றமன்னா! உன் மனைவியின் சிலம்பில் என்ன பரல்கள் போடப்பட்டிருந்தன? கூறு!" எனலும் அரசன் "ஆம். முத்துப்பரல்களே. நன்றாய் ஞாபகம்." என்றான்.

உடனே கண்ணகி, தன் கைச்சிலம்பை யெறிந்து உடைத்தாள். அதனின்றும் மாணிக்கப் பரல்கள் தெறித்துவிழுந்தன. அல்லாமலும் தன்னிடம் இருந்த மற்றோர் சிலம்பையும் அரசனுக்குக் காட்டி அவனையும் அவனது அரசியலையும் பழித்து உரைத்தாள். உடனே அரசன் தன் கொடுங்கோன்மைக்கு மிக வருந்தி மரித்தான். தன்னைப்போலவே நாயகனையிழந்து வருந்தும் அரசியைக் கண்ணுற்கண்டு, பின் ஒருபாவமும் அறியாத தன் நாயகன் உயிரிழக்கச்செய்த மதுராபுரியை தகிக்கக் கருதினாள்.

கற்புக் கடவுளாகிய அவளது கோபத்திற்கு அஞ்சி அக்கினிதேவனும் அவள்முன் நின்றான். அவனை நோக்கி கண்ணகி "பார்ப்பார் அறவோர்

பசு பெண்டிர் மூத்தோர் இளையோர் முதலிய நல்லவர்களை நீத்து மற்றைத் தீத்திறத்தாரை எரி' என்று கட்டளையிட்டாள். கண்ணகியின் ஆணைப்படி அக்கினிதேவன் மதுரையைப் பற்றிக்கொண்டான். தீயவர் யாவரும் அழிந்தனர்.

பின்னர் கண்ணகி அம்மதுராபுரித் தெய்வத்தின் வாய்மொழிப்படி சேரநாடு சேர்ந்து ஒரு மலைமீது பதினான்கு தினங்கள் தன் நாயகனை நினைத்து தவம் செய்தாள். பின் கோவலன் இரதத்துடன் போந்து அவளைத் தன்னுடன் விண்ணிற்கு அழைத்துச் சென்றான்.

இத்தகைய மறக்கற்புக் கடவுளாகிய கண்ணகிக்கு அச்சேர நாட்டு வேந்தன் கோயிலொன்றியற்றி முறையே பூசைகளும் நடத்திவரச் செய்தான். கற்பார் கண்ணகி பிரத்தியக்ஷ தெய்வமாய் விளங்குகிறாள்.

கற்புடையார் எதனையும் செய்யும் ஆற்றலுடையார் என்பது இவற்றால் விளங்கும்.

முற்றிற்று.

59136
N30

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

**தவணைத்தாள்.**

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6 1,00,000—30-1-84.